1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரிகள் போன்று உயர் கல்வியைத்தரும் கல்லூரிகளை அரசு அதிக முதலீடு செய்து ஆரம்பிப்பதைவிட, கல்வித் துறையிலே நாட்டமுள்ள, மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற உணர்வோடு நல்ல வசதியுள்ளவர்கள் அடிப்படை ஆதாரங்களை எல்லாம் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையில், எந்தப் பகுதியில் கல்லூரி தேவைப்படுகிறதோ அந்தப் பகுதியில் கல்லூரி அமைக்க முன் வந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 45, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

45—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் வசதி.

*2627— திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளை கம்ப்யூட்டர் மயமாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு செய்யப்பட உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் உதவியோடு கீழ்க்கண்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளை, கம்ப்யூட்டர் மூலம் ஆற்ற கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் தற்போது உள்ளது :

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை.

2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வேலூர்.

3. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

4. தொழில் நுட்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை.

5. தொழில் நுட்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

[1992 பிப்ரவரி 5

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46, திருமதி கே. மரியம்உல் ஆசியா மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

46—

கருச்சிதைவு தடைச் சட்டம்.

*2383 திருமதி கே. மரியம்உல் ஆசியா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாயின் வயிற்றில் இருக்கும்போதே குழந்தை பெண்ணாக இருந்தால் கருச்சிதைவு செய்துகொள்ள பலர் முனைவதால் பெண் சிசு கொலையைத் தடுக்க சட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடாளுமன்றத்தில் இதற்கான தடைச்சட்டம் அகில இந்திய அளவில் கொண்டுவரப்படவுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமையும்.

திருமதி கே. மரியம்உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக ஸ்கேன் எனப்படுகின்ற கருவியின் மூலம் எடுத்துப் பார்க்க வசதியில்லாதவர்கள் குழந்தை பிறந்ததும் பெண் குழந்தையாக இருந்தால் அந்தக் குழந்தைக்கு கள்ளிப்பால் மற்றும் நெல் மணிகளைக் கொடுத்து கொலைசெய்து விடுகிறார்கள். அதைத் தடுப்பதற்கும் அதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** இப்படி (கள்ளிப்பால்) வைத்துக் கொன்று விடுகிறார்கள் என்று வருவது சரியல்ல. பொதுவாக இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று இருக்கலாம். ** அந்த சொற்றொடர்கள் நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை, சிசுவாக கருவில் இருக்கிறபோதே அழிப்பதைத் தடுப்பதற்காகத்தான் இப்போது அந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று ஏற்கெனவே சட்டமன்றத்தில் ஒரு கருத்து வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து தடுப்பதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று தெரிவித்தார்கள். குழந்தை பிறந்த பின்னாலே அந்தக் குழந

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.